**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியல்</u>**

**முன்னிலை :- திரு. S. ஜோதிகைலாஷ், B.A.,B.L., (கூ.மு.பொ)**

2026 ஆம் ஆண்டு **ஜுன்** மாதம் **02ஆம்** நாள் **செவ்வாய்கிழமை**

**<u>கருங்கல் காவல் நிலைய குற்ற எண் 158/2026</u>**

இல்

குற்றவியல் பல் வகை மனு எண் 413/2026 (Crl.M.P)

| | | |
|---|---|---|
| எட்வின் (வயது 32/2026)<br>த/பெ. குருசுமுத்தன்<br>காரோடு, திருவனந்தபுரம் | | ............ மனுதாரர் /குற்றம் சுமத்தப்பட்டநபர் |
| | //எதிர்// | |
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>**கருங்கல்** காவல் நிலையம்,<br>**அடைப்புக்காவல் நாள்– 14.05.2026**<br>**பாரதீய நியய சன்கீதா பிரிவுகள் 305(a), 331(3) ன் கீழ்** | | ........எதிர்மனுதாரர்/ குற்றமுறையிடுபவர் |

இம்மனு **02.06.2026** தேதியில் பிரிவு 480 பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதா படி மனு தாக்கல் செய்யப்பட்டு இன்று என் முன் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு இவ்வழக்கில் மனுதாரர்/ குற்றம் சுமத்தபட்ட நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. E.கிளாஸ்டின்** அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/ குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை I அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை ஆராய்ந்தும், இன்று **02.06.2026** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் பிரிவு 480 பாரதிய நாகரிக் சுரக் ஷா சன்கீதா படி பிணைக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். இம்மனுவில், **கருங்கல் காவல் நிலைய குற்ற எண் 158/2026 பாரதீய நியாய சன்கீதா பிரிவுகள் 305(a), 331(3)ன் கீழ்** கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/ குற்றம் சுமத்தப்பட்ட நபர் கடந்த **14.05.2026** முதல் நீதிமன்றக்காவலில் இருந்து வருகிறார்.

மனுதாரர் /குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பில் மேற்படி நபர் எந்தவொரு விதத்திலும் குற்றவாளி இல்லை என்றும், மரியாதைக்குரிய குடும்பத்தை சேர்ந்தவர் என்றும், நிரந்தர வசிப்பிடத்தை சேர்ந்தவர் என்றும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவார் என்றும், வழக்கு விசாரணைக்காலத்தில் தவறாமல் முன்னிலையாவதாகவும் மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர் தரப்பில் ***<u>"மனுதாரர் 13.05.2026 ஆம் தேதி அதிகாலை 05.40மணியளவில் புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவரது கழுத்தில் கிடந்த 4 பவுன் தங்க செயினை திருடியதாக புகார்"</u>***

இம்மனு குறித்து எதிர்மனுதாரர் தரப்பு/ கற்றறிந்த அரசுத்தரப்பில் வழக்கு புலன் விசாரணையில் இருப்பதாலும், சாட்சிகளை கலைத்துவிட வாய்ப்புகள் உள்ளது என்பதாலும், வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகமல் தலைமறைவாகிவிட வாய்ப்புகள் உள்ளது என்றும், மேலும் இதுபோன்ற குற்ற

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.02 18:09:45 +0530

செயல்களில் ஈடுபட வாய்ப்புகள் உள்ளது என்பதாலும், எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

மனு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்/குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு அடிப்படை தோற்ற முகாந்தரம் இருப்பதாலும், மேற்படி குற்றமானது சமுதாயத்திற்கு எதிரானது என்பதாலும், பொது ஒழுங்கை பாதிக்க கூடும் என்பதாலும், மேற்படி மனுதாரருக்கு தற்சமயம் வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில் பிணை வழங்க ஏற்ற சூழ்நிலை ஏற்படவில்லை என்பதால் இந்த பிணை விடுவிப்பு செய்ய கோரும் மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு (02.06.2026)ம் தேதி அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

JOTHIKAILASH SIVAMURUGAN

Digitally signed by JOTHIKAILASH SIVAMURUGAN
Date: 2026.06.02 18:09:51 +0530

நீதித்துறை நடுவர்
இரணியல்(கூ.மு.பொ)

Judicial Magistrate Court,
Eraniel

Court Seal

“The Parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date.”